உறுப்பினர் செயலர்(பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை – திரு வி.எம். ராஜேந்திரன், பி.இ.,

...

ந.க.எண். 1235 / 2013 சேஉதிகு. நாள்: 27.9.2013

பொருள் : கட்டிட வரைபடம் -- சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – சேலம் மாநகராட்சி – வார்டு–பி, பிளாக்–1, ந.அ.எண். 26/9, 27/1, 28/1–ல் புதிய வார்டு–ஜே, பிளாக்–43, ந.அ.எண். 3/1, 3/2)–ல் 16 வீடுகள் கொண்ட புதிதாகக் கட்ட உத்தேசித்துள்ள அடுக்குமாடி குடியிருப்புக் கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை : 1. மனுதாரர் திருவாளர்கள் ஸ்ரீராஜகணபதி பவுண்டேஷன், திரு ராஜ்குமார் (ம) திரு செந்தில் விண்ணப்பம், நாள். 2.9.2013.
2. சேலம் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண். 1012, நாள். 25.1.2011

-----

**உத்திரவு :**

பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இணைப்புகள் மற்றும் வரைபடங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் சேலம் உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானத்தின்படி, சேலம் உள்ளூர் திட்டக் குழும பகுதி, சேலம் மாநகராட்சி, வார்டு –பி, பிளாக்–1, ந.அ.எண். 26/9, 27/1, 28/1 (புதிய வார்டு–ஜே, பிளாக்–43, ந.அ.எண். 3/1, 3/2)–ல் 613.23 ச.மீ. மனைப்பரப்பில் 16 வீடுகள் கொண்ட புதிதாக கட்ட உத்தேசித்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு உபயோகத்திற்கான மனைக்கு ‘ ABCD ’ என எல்லையிடப்பட்டு, ம.வ/சேஉதிகு எண். 57/2013 என்ற எண்ணில் மனையிட அனுமதியும், அம்மனையில் அமையும் கட்டுமானத்திற்கு க.வ.தி.அ/சேஉதிகு எண். 63/2013 என்ற எண்ணில் திட்ட அனுமதியும், நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு எண். 49 (1) (2)–ன்படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன்வழங்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை:**

Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the Architect/Licensed Surveyor and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

**நிபந்தனைகள்:**

1. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டுமானம் கட்டக் கூடாது. மாறுதல் ஏதேனும் செய்வதாய் இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

2. உள்ளாட்சியில் கட்டிட அனுமதி பெறப்பட்ட பின்னரே கட்டுமானப் பணி துவங்கப்பட வேண்டும்.

3. உத்தேச கட்டுமானத்தில் ‘சோலார் வாட்டர் ஹீட்டிங் சிஸ்டம்’ பொருத்தப்பட வேண்டும்.

4. உத்தேச கட்டுமானத்தில் வாகன நிறுத்துமிடம், திறவிடங்கள் ஆகியவற்றை அந்தந்த உபயோகத்திற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

...2

Scanned by CamScanner

5. அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 11.10.2002–ன்படி மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 3.11.2004–ன்படி கிணறு, குடிநீர் மேல்நிலை தொட்டி மற்றும் செப்டிக் டேங்கில் உள்ள 'யூ' டிராப்பில் கொசுவலை பொருத்தப்பட வேண்டும்.

7. உத்தேச கட்டுமானத்தில் தீயணைப்பு மீட்பு பணித் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றும் வகையில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

8. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டுமானத்தில் 'பிளை ஆஸ் பிரிக்ஸ் மற்றும் மெட்டீரியல்ஸ் பயன்படுத்தப்பட வேண்டும்.

9. உத்தேச கட்டுமானத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு கட்டுமானம் செய்யப்பட வேண்டும். மாறுதலாக கட்டுமானம் செய்யப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி திட்ட அனுமதி ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

10. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மனுதாரரால் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் பிரிவு எண்.50–ன்படி, இந்த திட்ட அனுமதி 26.9.2016 முடிய உள்ள காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது .

27.9.2013

உறுப்பினர் செயலர்(பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம்,
சேலம்.

27/9 27.9-13

**இணைப்பு :** திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் – 2.

**பெறுநர்**
ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

**நகல் :**
திருவாளர்கள் ஸ்ரீராஜகணபதி பவுண்டேஷன்,
திரு ஆர். ராஜ்குமார் (ம) திரு செந்தில்,
கதவு எண். 7/3, உடையப்பா காலனி,
செரி ரோடு,
சேலம் – 636 007 (வரைபடத்துடன்).

Scanned by CamScanner